★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர்: 20 தை 18 ரபி-அவ் 2 இதழ் 351
யாழ்ப்பாணம் புதன்கிழமை 31-1-79

## ஈரானிய மதத்தலைவர் உடன் நாடு திரும்பமாட்டார்

[பாரிஸ்]
ஈரானிய மதத்தலைவர் ஆயத்துல்லாகொமெய்னி உடனடியாக ஈரான் திரும்பமாட்டார் என்று பாரிஸிலுள்ள கொமெய்னியின் அலுவலக அதிகாரி நேற்று தெரிவித்தார். இதனை பிரான்ஸ் செய்திகளும் உறுதிப்படுத்தின.

கொமெய்னி, நேற்று நாடு திருப்புவார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது.

இதற்கிடையே, ஈரானில் தெஹ்ரான் விமான நிலையம் நேற்று மீண்டும் திறக்கப்பட்டது. ஆனாலும் ஒரேஒரு சர்வதேச விமானம் மட்டுமே நேற்று தரையிறங்கியது.

தெஹ்ரான் விமான நிலயத்தில் ஈரானிய போர் வீரர்கள், கவசவண்டிகள் சகிதமாக தயார் நிலையில் நிற்கின்றனர்.

# பகிஷ்கரிப்பியக்கத்தை அமைதியுடன் நடத்துக!

## அகிம்சை வழியை நாடுமாறு 'அமிர்' கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
"புதிய பல்கலைக்கழக அனுமதித் திட்டத்தை எதிர்த்து மாணவர்கள் நடாத்தும் பாடசாலை பகிஷ்கரிப்பை எவ்வித பலாத்காரத்திற்கும் இடமளிக்காதவகையில் அமைதியாக நடாத்தி அத்தினங்களில் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வேண்டுகிறேம்,"

எதிர்கக்ட்சி தலைவர் திரு ஏ அமிர்தலிங்கம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மாணவர்கள் நடாத்தவிருக்கும் பகிஷ்கரிப்பையிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;-

"தமிழ் மாணவர் சமுதாயத்தை மிகவும் பாதிக்கப் போகும் புதிய பல்கலைக்கழக அனுமதித் திட்டத்தை எதிர்த்து, தமிழ் மாணவர்கள் நடாத்தும் பகிஷ்கரிப்பு இயக்கத்தை அண்ணல் காந்தி காட்டிய நெறியில் நீதிக்காகப் பிரார்த்தனை வழியில் ஈடுபடுமாறு அனைத்து தமிழ் மாணவர்களையும் உருக்கமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழ் மாணவர் சமுதாயத்தை மிகவும் பாதிக்கப் போகும் புதிய பல்கலைக்கழக அனுமதித்திட்டத்தை எதிர்க்கும் முகமாக பெப்ரவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி ஏழாந்திகதிவரை தமிழ் மாணவர்கள் [illegible] பகிஷ்காரத்தை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாக அறிகிறேம். அநியாயத்தை எதிர்க்கவேண்டியது எமது கடமையாகும்.

இன்றைய சூழ்நிலையில் வீதிகளில் அணிவகுத்துத்திரிவது, மாணவர்மீது பல இன்னல்களை விளைவிப்பதற்கு வழிவகுக்கும். இப் பகிஷ்கார இயக்கத்தை அமைதியாக எவ்வித பலாத்காரத்திற்கும் இடமளிக்காதவகையில் அமைதியாக நடாத்தி அத்தினங்களில் அண்ணல் காந்திஜி காட்டிய அகிம்சை வழியில் நீதிக்காகப் பிரார்த்தனையில் ஈடுபடுமாறு வேண்டு[illegible] மாணவர்களைத் தூண்டிவிட்டுப் பலியாக்கும் முயற்சியில் எவரும் ஈடுபட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்". [செ]

## ஆசிரியர்களும் பகிஷ்கரிக்க வேண்டுமாம்

[யாழ்ப்பாணம்]
"தரப்படுத்தலை எதிர்த்து 1ம் தேதி முதல் 7ம் தேதி வரை மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்களும் பகிஷ்கரிக்கவேண்டும்"

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ரி. சங்கரப்பிள்ளை தரப்படுத்தல் தொடர்பாக நேற்று வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "தரப்படுத்தல் தமிழ் மக்களைப் பாதிக்கிறது.

"தமிழ் மாணவர்களுக்கு ஒருமுறையில், மற்ற மாணவருக்கு வேறுமுறையும், அனுஷ்டிக்கப்படுவதனுல் அரசாங்கமே பிரிவினையை நிலைநாட்டுகிறது. இன ஒற்றுமை இருக்கவேண்டும் எனக்கூறும் தார்மீக அரசாங்கம், ஒற்றுமையை அழிக்

[8ம் பக்கம் பார்க்க]

### தினசரித்தேவை:

## ஒன்றரைக் கோடி சிகரெட்!

[கொழும்பு]
இலங்கையில் தினசரி ஒருகோடி ஐம்பது லட்சம் சிகரெட்டுகள் புகைக்கப்படுவதாகவும், கொழும்புக்கு மட்டும் தினசரி ஐம்பது லட்சம் சிகரெட்டுகள் தேவைப்படுவதாகவும் ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது.

சிகரெட் கம்பெனி ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக இப்பொழுது தினசரி 25 லட்சம் சிகரெட்டுகளே உற்பத்திசெய்யப் படுகிறது!

### முழங்காவில் ஆசிரியர்

## பற்றுகுறை நீங்கும்

[illegible]
[illegible] அ. த. க. பாடசாலையின் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குவதற்கு வட

[8-ம் பக்கம் பார்க்க]

### நாளை முதல் ஏழாம் திகதி வரையிலான

## பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கு இளைஞர் பேரவை ஆதரவு

(யாழ்ப்பாணம்)
தரப்படுத்தலை எதிர்த்து தமிழ் பிரதேசங்களில் நாளை முதல் 7-ம் திகதிவரை மாணவர் இயக்கங்களும், யாழ். பல்கலைக்கழக மாணவரும், நடத்தவிருக்கும் பாடசாலை பகிஷ்கரிப்புக்கு தமிழ் இளைஞர் பேரவை பூரண ஆதரவளிக்க முடிவு செய்துள்ளது

இந்தப் பாடசாலை பகிஷ்கரிப்பில் மாணவரும் பெற்றோரும், நூற்றுக்கு நூறுவீதம் பங்குபற்றி பூரண எதிர்ப்பை உலகிற்கு காட்ட வேண்டுமென மாணவர் இயக்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழ் இளைஞர் பேரவை தரப்படுத்தல் குழு நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

'தமிழர் விடுதலைக் கூட்டணியினுல் முன்வைகப்பட்டுள்ள தரப்படுத்தல் தொடர்பான கொள்கையில் 75 வீதம் திறமைக்கும் 25 வீதம் பின் தங்கிய பிரதேசத்துக்கும் என்றதனை தமிழ் இளைஞர் பேரவை முற்றுக ஏற்றுக்கொள்வதுடன் யாழ். வளாக மாணவர்களும் ஏனைய மாணவர் மன்றங்களும் பெப்ரவரி முதலாம் திகதி முதல் 7-ம் திகதிவரை ஏற்பாடு செய்திருக்கும் பாடசாலை பகிஷ்கரிப்புக்கு நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்கும்.

'தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை நிராகரித்து தமிழினத்தை திட்டமிட்டு அழித்தொழிக்கும் முதலாளித்துவ ஐ. தே. கட்சி ஆட்சிக்கு ஆதரவாக இந்தி

(8-ம் பக்கம் பார்க்க)

## கடல்நீரில் வெங்காயம் விளையும்!

[உடுப்பிட்டி]
உவர்த்தன்மையைக் கொண்டுள்ள வல்லைவெளியில் விவசாயிகள் மேற்கொண்ட வெங்காயப் பயிர்ச் செய்கை வெற்றியளித்துள்ளது.

இப் பகுதியில் உள்ள காணிகளில் வெங்காயப் பயிர் செய்துள்ள விவசாயிகள் தமது வெங்காயப் பயிர்களுக்கு கடல் நீரையே பாய்ச்சி வருவது குறிப்பிடத்தக்கது.

### ஐம்பது ரூபா அலவன்ஸ் உயர்வுடன்...

## உங்கள் சம்பளம் ரூ. 300க்கு அதிகமா?

## கூப்பனை நீங்கள் ஒப்படைக்கவேண்டும்!

(யாழ்ப்பாணம்)
50 ரூபா சம்பளம் அதிகரிப்புடன் மாதச் சம்பள 300 ரூபாவிற்குமேல், பெற விருப்பவர்கள் உடனடியாக பங்கீட்டரிசிப் புத்தகத்தை ஒப்படைக்கவேண்டும்.

யாழ். உதவி உணவு கட்டுப்பாட்டு இலாகா உத்தியோகத்தர் ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"300 ரூபா சம்பளத்திற்கு உட்பட்டவர்களின் குடும்பங்கள் தொடர்ந்து பங்கீட்டு அரிசி பெற்றுவந்தனர். அரசாங்க ஊழியருக்கும் தனியார் துறையினருக்கும் 50 ரூபா சம்பள உயர்வு இம்மாதம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சம்பள உயர்வினுல் மாதச்சம்பளம் 300 ரூபாவிற்கு கூடியவர்களின் குடும்பத்திலுள்ள அத்தனை பங்கீட்டரிசி புத்தகங்களும் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் ஒப்படைக்கப்படபட வேண்டும். 300 ரூபாவிற்கு மேல் சம்பளம் பெறுபவர்கள் அதனை உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்காமல் தொடர்ந்து பங்கீட்டு அரிசிபெற்று வந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்றும் அந்த உத்தியோகத்தர் தெரிவித்தார். (க)

## காரைநகர் கொலைவழக்கு: எதிரி விடுதலை

[யாழ்ப்பாணம்]
காரைநகர் கொலைவழக்கில் எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

காரைநகரைச் சேர்ந்த சுப்பிரமணியம் மாணிக்கம் எனும் [66 வயது] மூதாட்டியை கழுத்து நெரித்துக் கொலை செய்து 25,000ரூபா பெறுமதியான நகைகளையும் திருடியதாக நாகலிங்கம் மகாலிங்கம் என்பவர் மீது குற்றம்சாட்டப்பட்டு இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

யாழ். மேல்நீதிமன்றத்தில் இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபோது, எதிரி நிரபராதி என்று ஜூரி சபையினர் தெரிவித்ததைத் தொடர்ந்து எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

## வரி விளம்பரம்

### தேவை

திறமையாக வேலைசெய்யக் கூடிய மெசின்மைன்டர் தேவை. நேரில் வரவும் சித்திரா அச்சகம், 310, மணிக் கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
1477

திறமையாக வேலைசெய்யக் கூடிய மெசின்மைன்டர் தேவை நேரில் வரவும் ஆர். எஸ். அச்சகம், 149, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
1478

கட்டிடம் கட்டும் கம்பனி தமிழ் இயக்குனருக்கு யாழ்ப்பாணத்தில் அல்லது சுற்றுடலில் இரண்டு அல்லது மேற்பட்ட அறை மின் வெளிச்சமுள்ள வீடு வாடகைக்குவேண்டும். முழுவிபரத்துடன் எழுதவும். அழகரத்தினம், 9, கொன்சிஸ்ரறி கட்டிடம், கொழும்பு- 11.
1487

### WANTED

Agriculture / Farm school trained and / or experienced person with energy discipline and enthusiasm to be in charge of a compact-coconut paddy and subsidiary - crop farm. Good salary and prospects Apply with copies of testimonials and 2 references to Advt No: 1482, C/o Eelanadu Ltd, Jaffna.
1482

### லொறி பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பம்

### இசுசு லொறி
(காப் இல்லாத மொடல்)

வலி கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய லொறிக்கு பொடி அடிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தையும் கேள்விக் கொத்தையும் 5-2-79ம் திகதிக்கு முன் பெற்று 12-2-79ந்திகதிக்கு முன்னர் தலைவர், வலிகிழக்குவடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், அச்சுவேலி என்ற முகவரிக்குபதிவுத்தபால் மூலம் சீல்இட்ட தபால் உறையில் இடதுபக்க மூலையில் 'பொடி' அடித்தல் எனக்குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும்.

தலைவர்,
வ. கி. வ. ப. ப, நோ- கூ. சங்கம்,
27-1-79. அச்சுவேலி.
1486

### ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் 88, பிரதான வீதி "பிராங்லுட்மினி" ஸ்தாபனத்தில் 31-01-78ம் திகதிக்கு முன் அடைவுவைத்து மீட்கப்படாத நகைகள் 24-02-79 சனிக்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்

வி. செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்,
'இராசகிரி'
643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 1480

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## குடும்பச் சண்டை: அசிட்வீச்சு

[வேலணை]

குடும்பத்தகராறு ஒன்றை அடுத்து அசிட்வீச்சு இடம் பெற்றதாம். இத்திகிலூட்டும் சம்பவம் வேலணையில் நிகழ்ந்துள்ளது

விநாயகமூர்த்தி என்பவர் அசிட்வீச்சையடுத்து யாழ் பெரியாஸ்பத்திரிக்கு விரையப்பட்டார்.

கணவன்—மனைவிக்கிடையே ஏற்பட்ட தகராறையடுத்து மனைவி அவலக்குரல் எழுப்பியதாகவும் இதனைத் தொடர்ந்து அசிட்வீச்சு நடைபெற்றதாகவும் கூறப்படுகிறது;

ஊர்காவற்றுறைப் பொலிசார் இச்சம்பவம் குறித்து சந்தேகத்தின்பேரில் பொன்னுத்துரை என்பவரைத் தேடி வருகின்றனர். [உ]

## கருத்தரங்கு
(பண்டத்தரிப்பு)

தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டவும், தாயகத்தைப் பாதுகாக்கவும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவைத் திரட்டுமுகமாக முக்கிய கருத்தரங்கு ஒன்று அடுத்த மாதம் 18ந் திகதி சங்கானையில் திரு அ' சின்னையா தலைமையில் நடைபெறவுள்ளது. [அ]

# கசூரினா பீச்சில் உல்லாசவிடுதி: சைவசபை ஆட்சேபம்

## ஜனதிபதி, பிரதமர் கலாசார அமைச்சரைச் சந்திக்க முடிவு

[யாழ்ப்பாணம்]

காரைநகர் கசூரினா பீச்சில் ஹோட்டல் கூட்டுத்தாபனம் நிறுவ உத்தேசித்திருக்கும் உல்லாசப் பிரயாணிகள் விடுதித்திட்டத்தைக் கைவிடுமாறு காரைநகர் சிவன் கோவில் புனித பாதுகாப்புச் சபையினர் அரசாங்கத்தைக் கோருவதென முடிவுசெய்துள்ளனர்,

கூட்டுத்தாபனத்தின் இத்திட்டப்பற்றி ஆராயும்பொருட்டு பாதுகாப்புச்சபை நடத்திய அவசரக்கூட்டமொன்றில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அகில இலங்கை சேக்கிழார் மன்றத் தலைவர் திரு. த சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இதுவிடயமாக ஜனதிபதி, பிரதமர், கலாசார மந்திரி ஆகியோரைச் சந்திப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது

இக்கூட்டத்தில் காரைநகர் சைவப்பெரியார்கள், காரைநகர் மணிவாசகர்சபையினர், காரைநகர் தமிழ்வளர்ச்சிக்கழகத்தினர், காரைநகர் சைவ மகாசபையினர், காரைநகர் வடக்கு இராமமுன்னேற்றச் சங்கத்தினர் சிவன்கோவில் ஆதீனகர்த்தாக்கள், ஆசிரியர்கள் முதலானோர் சமூகமளித்திருந்தனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் ஒரு நிறுவனம் உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றை கஜூரினா பீச்சில் அமைக்க முற்பட்டபோது அதற்கு கோவில் பாதுகாப்புச் சபை அரசிடம் ஆட்சேபம் தெரிவித்ததன்மூலம் அம்முயற்சி நிறுத்தப்பட்டது என்பதும் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

தற்போது ஹோட்டல் கூட்டுத்தாபனத்தின் இம்முடிவை ஆட்சேபித்து பகிரங்கக் கூட்டம் ஒன்றை நடத்துவதென்று காரைநகர் சைவமகாசபை முடிவுசெய்துள்ளது.
(உருத்தி-நி-உ)

## கடனால் உண்டான கவலை: பெண் தற்கொலை

### அல்வாயில் சம்பவம்

[நெல்லியடி]

கடனால் உண்டான கவலையால் திருமதி சின்னத்தம்பி தவமணிதேவி என்ற குடும்ப மாது நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

29 வயதுடைய இவ்விளம் பெண். அல்வாய், எழுவாய் வத்தையை சேர்ந்தவராவார். 3 பிள்ளைகளின் தாயான இவர் கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் திருமணம் முடித்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பிரஸ்தாப பெண்ணின் மரணம் சம்பந்தமான விசாரணையை வடமராட்சிப்பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வீ புவனேந்திரன் நடத்தினர். பருத்தித்துறை பொலிஸ் கான்ஸ்டபிள் திரு' ஆ. சிவசுப்பிரமணியம் சாட்சிகளை ஆஜர் செய்தார்.

விசாரணையின் பொழுது காலஞ்சென்றவரின் சகோதரியான சுப்பிரமணியம் கனமணி தெரிவித்ததாவது:-

"காலஞ்சென்ற எனது தாயு சகோதரி தவமணி தேவி அல்லது தங்கலட்சுமியும் நானும் ஒரே காணியிலுள்ள வீட்டில் வசித்து வருகின்றோம் காலஞ்சென்ற எனது சகோதரி கடந்த 7 ஆண்டுகளுக்கு முன் திருமணம் முடித்திருந்தார். விவசாயம் செய்துவரும் கணவருடன் மகிழ்ச்சியாக வாழ்ந்துவந்த சகோதரி 3 பிள்ளைகளுக்கு தாயானர்.

கடந்த மூன்று மாதத்திற்கு முன்பு சகோதரியும் மைத்துனருமாக ஒரு காணியை வாங்கினார்கள். அக்காணியை வாங்குவதற்கு பணவசதி இல்லாத காரணத்தினால்நகைகளை அடகு வைக்கவேண்டியேற்பட்டது. நகைகள் அடைவில் இருப்பதை எனது காலஞ்சென்ற சகோதரி விரும்பவில்லை. நகைகளை மீட்குமாறு கணவருடன் சர்ச்சை செய்துவந்தார்.

சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் பிற்பகல் பலத்த குரலில் கணவனும் மனைவியும் சச்சரவில் ஈடுபட்டார்கள். நான் எனது அறையிலிருந்து வெளியே வந்து பார்த்தேன். மைத்துனருக்கு முன்பு சாப்பாடு இருந்தது நான் ஏன் சச்சரவில் ஈடுபடுகிறீர்கள் என கேட்டபொழுது 'உனக்கென்ன அக்கா கடனில்லை. சந்தோசமாய் வாழுகின்றாய், நானும் கடனின்றி நிம்மதியாக வாழ வேண்டும் என்றுதான் விரும்புகின்றேன் என்று கூறினாள். காசு வந்தால் கடன் எல்லாவற்றையும் போக்கலாம் பிரச்னையில்லாமல் என்று ஆறுதல் கூறினேன்.

சம்பதினம் வாந்திஎடுக்கும் சத்தம் கேட்டது. சத்தத்தைக் கேட்ட நான் சகோதரியின் வீட்டிற்கு போனேன். சகோதரி வாந்தியுடன் அவஸ்தைப் படுவதைக் கண்டு கதறினேன். அயலவர்களும் கூடிவிட்டார்கள். பின் மரணம் சம்பவித்தது.

கணவரான வ. சின்னத்தம்பி இளைப்பாறிய பொலிஸ் அதிகாரி சி. கனகரட்ணம் ஆகியோரும் சாட்சியமளித்த பின் மரணவிசாரணை அதிகாரி தற்கொலைஎனத் தீர்ப்பளித்தார். [உ]


### 36 ஸ்ரீ 405 இலக்க உழவு இயந்திர விற்பனை

வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தின் பாவிப்பிலுள்ள இங்கிலாந்து மொடல் 36 ஸ்ரீ 405 என்னும் இலக்கத்தையுடைய டீசல் பேர்குசன் 135 டீசல் உழவு இயந்திரம் 44 ஸ்ரீ 5460 என்ற இலக்கத்தையுடைய இங்கிலாந்துப் பெட்டியுடனும் ரில்லர் கலப்பையுடனும் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் மீளப்பெறுத பணமாக ரூபா ஐந்தும், மீளப் பெறத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்தி 12-2-79க்கு முன்னர் விண்ணப்பபடிவங்களைப் பெற்று 19-2-79-ந் திகதிக்கு முன்னதாக தலைவர், வலிகிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி என்ற விலாசத்திற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட பதிவுத தபாலில் உழவு இயந்திரக் கேள்விப்பத்திரம் என்று இடதுபுற மேல் மூலையில் எழுதி அனுப்புதல் வேண்டும். பார்வையிட விருப்பவர்கள் 5-2-79 தொடக்கம் காரியாலய நேரத்தில் தலைமைக் காரியாலயத்தில்பார்வையிடலாம். அரக்கு முத்திரையிடப்படாத பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

தலைவர்,
வ. கி. வ. ப. ப. நோ. கூ. சங்கம்,
27-1-79. அச்சுவேலி.
1485


## கத்திவெட்டு வழக்கில் பெண் விடுதலை

(வேலணை)

கத்தியால் காயம் விளைவித்ததாகத் தொடரப்பட்ட வழக்கு ஒன்றில் எதிரியாகக் குற்றச் சாட்டப்பட்ட பெண் விடுதலை செய்யப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்த ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வி. ஜெகசோதி சாட்சியம் முரண்பாடு காரணமாக எதிரியை விடுதலைசெய்தார்.

மண்டதீவைச் சேர்ந்த வி. அன்னலிங்கம் என்பவரை கொடுவாக்கத்தியால் வெட்டி காயம் விளைவித்ததாக அவரின் மைத்துனியான ஊர்காவற்றுறை கரம்பனைச் சேர்ந்த பராசக்தி என்பவர்மீது ஊர்காவற்றுறைப் பொலிசாரால் குற்றச்சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் காயப்பட்டவரும் சாட்சியான முத்தர் கந்தையாவும் சாட்சியம் அளித்தனர்

இவ்வழக்கில் பொலிஸ் தரப்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எம் ஐயாத்துரையின் உதவியுடன் சட்டத்தரணி திரு எஸ் கே மகேந்திரன் வழக்கை நடாத்தினர் எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. என். ஸ்ரீகாந்தா ஆஜரானர் (உ)

## வீடமைப்புத் திட்டம்:

## 1 கோடி 25 லட்சம் ரூபா பிரிட்டிஷ் உதவி

(கொழும்பு)

இலங்கையில் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கும் புதிய வீடமைப்புத் திட்டத்திற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் 1 கோடியே 25 லட்சம் ரூபா உதவி வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்படி வீடமைப்புத் திட்டம் சிராகச் செயற்படுவதற்கு இவ்வுதவி பெரிதும் பயன்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## கோழித்தீன் தொழிற்சாலை மண்டைதீவில் அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடற்றொழில் கூட்டுறவுச் சங்கம் ஏழுலட்ச ரூபா செலவில் கோழித்தீன் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கான பூர்வாங்க ஒப்பந்தங்களில் நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டன.

இத் தொழிற்சாலை, மூன்று மாதத்தில் பூரணமாக்கப்பட்டு, உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்கும். நாளொன்றுக்கு 15 தொன் மீனை இத் தொழிற்சாலையில் அரைத்து உடனடியாக 5 தொன் புரத மீனுணவு பெறப்படும். உற்பத்தி செய்யப்படும் முழு அளவிலான உற்பத்திப் பொருளையும், இலங்கை எண்ணெய் கொழுப்புக் கூட்டுத்தாபனம் கொள்முதல் செய்யவுள்ளது'

கட்டடம் அமைப்பதற்கான 2 ஏக்கர் காணி, அரசாங்கத்தால் மண்டைதீவில் வழங்கப்பட்டுள்ளது. வட இலங்கையில் முதல் தடவையாக இத் தொழிற்சாலைக்கான பொறிகளை நல்லூரில் அமைந்திருக்கும் புரூ மோட்டர்ஸ் கம்பனி லிமிட் அமைப்பதற்கென அனுமதியை மேற்படி சங்க நிர்வாகிகள் சம்பந்தப்பட்ட கம்பனியினரிடம் வழங்கியுள்ளனர்.

முதல் கட்டத்தில், 200 தொழிலாளர்கள் இத்தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்படுவர். காலப்போக்கில் தொழிலாளர் தொகை அதிகரிக்கப்படும்.

தொழிற்சாலை பூரணமான உற்பத்தியை மேற்கொள்ளும் பட்சத்தில் இரண்டாவது கட்டமாக, பிடிக்கும் மீனை உடனடியாக கருவாடு ஆக்கும் தொழிற்சாலை யும் விஸ்தரிக்கப்படுமாம். [கெ]

## இன்று குறிஞ்சிக் குமரன் உற்சவம்

[கம்பளை]

பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோவில் அலங்கார உற்சவம் இன்று புதன் கிழமை முதல் பெப்ரவரி மாதம் 10ம் தேதி தைப்பூச விழாவரை நடைபெறும்.

தினமும் மாலை 4 மணிக்கு அபிஷேகஆராதனையும், 5 மணிக்கு விசேடபூசையும் 5-45 மணிக்கு கூட்டுப்பிரார்த்தனை மற்றும் விசேட நிகழ்ச்சிகளும், 6-45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், 7 30 மணிக்கு திருவுலாவும் நடைபெறும்

9ம் நாள் விழா கண்டி இந்து வர்த்தகர்களாலும், தைப்பூச விழா பேராதனைப் பல்கலைக் கழக இந்துப் பட்டதாரிகள் மன்றத்தாலும் நடாத்தப்படும். (இ)

ஈழநாடு
The Eelanaadu

## நியமனங்கள் பற்றிய ஆராய்வு

அரச சேவைகளிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் ஏதேனும் பதவிக்கு நியமனம் பெற்றுள்ள அல்லது ஏதேனும் பதவி வகிப்பதற்கு நியமனம் பெறப் பிரேரிக்கப்பட்டுள்ள எவரேனும் ஆளின் தகுதியை ஆராய்வதற்காகவும், அத்தகைய ஆள் நியமனம் பெறுவதற்குத் தகுதியானவரா என்பது பற்றிச் சான்றுரை வழங்குவதற்காகவும் பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது

இத் தெரிகுழுபற்றியும் இது விசாரிக்கவேண்டியிருக்கும் நியமனங்கள் பற்றிய விபரங்களும் பத்திரிகைகளில் விளம்பரமாக வெளியிடப்பட்டுள்ளன.

(அ) எல்லா அமைச்சுக்களினதும் செயலாளர்கள், (ஆ) வெளிநாடுகளில் இலங்கைத் தூதுக் குழுக்களின் தலைவர்களாக நியமனம் பெறப் பிரேரிக்கப்பட்டுள்ள எல்லா நபர்களும், (இ) அரச அல்லது அரசுத் தொடர்புச் சேவைகளின் [உதாரணம்— அரச சபைகள், கூட்டுத்தாபனங்கள்) நிரந்தர உத்தியோகத்தர் ளகல்லாத அரச நிறுவனங்களின் தலைவர்களும், உறுப்பினர்களும், (ஈ) மேற்தரப்பட்டிருக்கும் மூன்று வகைப் பதவித் தரங்களுடன் ஒப்பிடக்கூடிய நிபுணத்துவ ஆலோசகர்கள், ஆலோசகர்கள் போன்ற பதவிகளுக்கு நியமிக்கப்பட்ட இலங்கைப் பிரஜைகள்.

இவர்களைப்பற்றித் தெரிகுழு தற்போது ஆராய்ந்து வருவதாகவும் இந்த நியமனம் ஏதேனும் குறித்து ஏதேனும் நிறுவனம் அல்லது எவரேனும் கருத்துத் தெரிவிக்கலாமென்றும் கோரப்பட்டுள்ளது.

அரச சேவைகளிலும் அரச கூட்டுத் தாபனங்களிலும் முக்கியமான பொறுப்பான பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் திறமையும் தகுதியும் நேர்மையும் உள்ளவராக இருக்க வேண்டுமென்பதிலும் அவர்கள் எந்தவித புகார்களுக்கும் இடமற்றவர்களாக இருக்க வேண்டுமென்பதிலும் அரசாங்கம் தீவிர அக்கறை செலுத்துகின்றதென்பதையே இது எடுத்துக் காட்டுகிறது.

இந்தப் பதவிகளுக்குப் பொருத்தமான திறமையும் தகுதியும் நேர்மையும் உள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவதால் சிறந்த சேவை கிடைப்பது மட்டுமல்ல நாட்டின் நற்பெயரும் பாதுகாக்கப்படுமென்பதில் ஐயமில்லை

இதே போல் வேறு சில துறைகளிலும் இதேபோன்று அரசாங்கம் சில நடைமுறைகளை மேற்கொண்டால் நாட்டில் வீண் பிரச்னைகள் ஏற்படாமல் தடுப்பதுடன் அமைதியும் பாதுகாக்கப் படமுடியுமென்று எதிர்பார்க்கலாம். ஆயுதப்படைகள், பொலிஸ் படைகளைச் சேர்ந்தவர்களும் நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களும் உள்நாட்டில் திடீர் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இவற்றில் சில பதவி உயர்வுகளுடன் செய்யப்படுகின்றன. மற்றும் சில தண்டனை இடமாற்றங்களாகவும், நியமனங்களாகவும் இடம்பெறுகின்றன.

இவ்விதம் இடமாற்றம் பெறுபவர்களும் வெறுப்புடனும் விரக்தியுடனுமே தமது கடமையை ஏற்றுக்கொள்கின்றனர். இதனால் சில சமயங்களில் தம்மையும் மீறித் தமது அதிருப்தியை வெளிக்காட்டும் நிலைமைகளும் ஏற்படுகின்றன

எனவேதான் நாட்டின் ஒருபகுதிக்கு குறிப்பாக தமிழ்பேசும் மக்கள்பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நியமனம் பெறவிருப்பவர்களுக்கும் அந்தப் பகுதி மொழியில் தேர்ச்சியளித்தும் அவர்களுக்குப் பயிற்சியளித்தும் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்வதும் இதே போல் நாட்டின் இதர பகுதிகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கும் தேர்ச்சியும் பயிற்சியளிக்கவும் நடவடிக்கை எடுத்தால் வீண் பிரச்னைகள் தோன்றமாட்டாது. இதேசமயம் நாட்டின் அமைதியும் பாதுகாக்கப்படும் சீரான நிர்வாகமும் ஏற்படுமென்று சொல்லத் தேவையில்லை.

# சித்திரக்கவிச்சுடர்
## வன்னியூர்க் கவிராயர்

''வன்னியூர்க் கவிராயர்'' மறைந்து ஓராண்டாகிறது கவிஞரின்பிறந்தகமான செட்டிகுளம் — இலுப்பைக்குளத்தில் இன்று மாலை நினைவுமண்டபத் திறப்பு விழாவும் நினைவுதினக் கூட்டமும் நடைபெறுகிறது இதனையொட்டி இக்கட்டுரை இங்கு வெளியாகிறது.



வவனியா-மன்னர் மாவட்டங்களிலே குடத்து விளக்காக வாழ்ந்து மறைந்து போன ஈழத்தின் ஒப்பற்ற கவிமணிகளில் எட்டுத் தலைமுறைவரையில் பரம்பரையாக வந்துதித்த சித்திரப்பாவலரே வன்னியூர்க்கவிராயராவர்.

வன்னியூர்க் கவிராயரின் தந்தையாரான சந்தியோகுப் பிள்ளைப்புலவர்தான், 'என்றிக் எம்பரதோர்' என்னும் பண்டைக் கதைக்கு முதன் முதலில் வசனமமைத்து நாடகமாக எழுதி அச்சிட்டு வெளியிட்டவர். கடந்த 1927ம் ஆண்டில் 'எம்பரதோர் டிருமா' என்ற பெயரில் அந் நாடகம் வெளிவந்தது.

கவிராயர் மிக்க இளமையாக இருந்த காலத்தில் அவரது தந்தையாரை இழந்தமையினால் உயர்கல்வி கற்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டாமற் போய்விட்டதாயினும் தந்தையாரின் கவித்துறையும் வைத்தியத் தொழிலும் முதுசொத்தாக வந்துறைந்து கொண்டது கவிஞராக மாத்திரமன்றி சிறந்த சித்தாயுர் வேத வைத்தியராகவும் திகழ்ந்தார்.

1953ம் ஆண்டு ஆடி மாதம் தினஏடொன்றில் ஓர் ஆசிரியர் கடிதத்துடன் இலக்கியப் பிரவேசம் பண்ணிய கவிராயர்- அரசியலிலும், வேறு எவ்வகையான 'போக்கு'களிலும் அகப்படாமல் சுதந்திரமாக நின்று ஈழத்தின் சகல பத்திரிகைகள் சஞ்சிகைகளிலும் நிறைய எழுதியிருக்கின்றார். 1966ல் நடுப்பகுதியில் மறைந்த 'மக்கள் கவிமணி' மு. இராமலிங்கத்துக்கும், தென்புலோலியூர்க்கவிஞர் பண்டிதர் பரந்தாமனுக்குமிடையே 'கடற்கரையில் தாமரை மலருமா' மலராதா?' என்று வாரக் கணக்கில் இடம்பெற்ற விவாதத்தில் தலையிட்டு... கடற்கரையிலும் தாமரை மலரும் என்பதை ஆதாரமாக நிரூபித்து விவாதத்தை முடித்து வைத்தார். குறித்த கட்டுரை 25-6-66 'ஈழநாடு' வார இதழில் வெளிவந்தது.

சி. க. சண்முகநாதன்

நூற்றுக்கணக்கான சிறு கதைகளும் ஆயிரக்கணக்கான கவிதைகளும் மற்றும் கிராமிய இலக்கியக் கட்டுரைகள்-வைத்திய-நகைச்சுவைக் கட்டுரைகளென்றும் எழுதியிருக்கும் இக்கவிராயர் பிரபல விழாக்களிலும் கலந்து கொண்டு கவிதை பாடியதோடு மாத்திரமின்றி, வானொலிக் கவியரங்குகளிலும் பங்குபற்றிப் பாராட்டுக்கள் பெற்றார்.

எஸ். எல். சவுந்தரநாயகம் என்ற பெயரில் மாத்திரமன்றி சவுந்தரன்-பாவேந்தன் - எஸ். எல். எஸ். வன்னியூர்நாயகம், மனோகரி - முதலிய புனை பெயர்களிலும் எழுதியிருக்கும் கவிராயர், நாளடைவில் யாவற்றையுமே கைவிட்டு பிறந்த மண்ணின் மேல் கொண்ட வற்றாத பாசத்தின் விளைவாக 'வன்னியூர்க்கவிராயர்' என்ற பெயரையே நிரந்தரமாக ஏற்றுக் கொண்டார். எழுத்துலகில் பல்வேறு உத்திகளையும் கையாண்டு இலக்கியம் படைத்த போதிலும் 'சித்திரக்கவி' வாயிலாகவே அவரது தனித்திறமை வெளிப்பெற்றது... பாவலர்கள் எட்டிக்கூடப் பார்க்கப் பயப்படும் சித்திரங்களைத் தேர்ந்தெடுத்து 'நாகபந்தம்', 'சக்ரபந்தம்' 'தேர்ப்பந்தம்' 'நிரோட்டம்' போன்ற சித்திரக்கவிகளைப் படைத்தார். முதன்முதலில் 'நாகபந்தம்' படைத்தபோது ஆயிரத்திலொரு கவிஞருக்குத்தான் இத்தகைய சக்தி கைவரப் பெறுமென்று பத்திரிகை வாயிலாகப் பாராட்டுப்பெற்றார்.

மறைவதற்கு முன்னர் கிளிநொச்சி சென்று உழவர்விழாவில் கலந்து கொண்டு கவியரங்கிற்குத் தலைமைதாங்கி விட்டு ஊர்மீண்ட ஒருசில தினங்களில் இவ்வுலகவாழ்வை நீத்தார் கவிராயர், மிகவும் பின்தங்கிய சூழ்நிலையில் வன்னிப்பகுதியில் வாழ்ந்தபோதிலும் 'சமுதாய மறுமலர்ச்சி' என்ற இலட்சியக்கனவுதான் அவரிடம் குடிகொண்டிருந்தது மறைந்த கவிஞனின் கனவினை நிறைவேற்ற நூல்கள் வெளியிடும் நிறுவனங்களோ - எழுத்துலக அபிமானிகளோ - முன்வருவார்களாயின் அதுவொன்றே கவிஞருக்கு நாம் ஆற்றும் நன்றிக் கடனாக அமையும்!

## மணிவாக்கு

ஒரு பிரமாணத்தை மீறுவது ஏனைய பிரமாணங்களையும் மீறிச் செய்வதற்கு இன்னும் வழிகோலுமென்பதற்கு ஐயமில்லை.

—காந்திஜி

# மக்கள் கருத்து

## குருநகர் வீட்டுத்திட்டம்: தடை உத்தரவு நியாயமல்ல

குருநகரில் ஆரம்பிக்கப்படவிருந்த வீடமைப்புத் திட்டம் மீண்டும் அரசாங்கத்தால் இடைநிறுத்தம்செய்யப்பட்டுள்ளதாகப் பத்திரிகை வாயிலாக அறிந்தோம். குருநகரைப் பொறுத்தவரை வீடற்ற வறிய மக்கள் தொகை நாளாவட்டம் பல்கிப் பெருகுவதையும், ஒரு வீட்டில் நான்கு ஐந்து குடும்பங்கள் என்று நெருக்கடி நிலைமையில் வாழ்வதும் கண்கூடான உண்மையாகும். குறிப்பிட்ட வீடற்ற மக்களுடைய குறைகள் நிவர்த்திசெய்யப்படலாம் என்று எதிர்பார்த்த நேரத்தில் இவ் வீடமைப்புத் திட்டம் நிறுத்தப்பட்டசெய்தி மக்கள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

குருநகர் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான வீடுகளை அமைக்க மேலிடம் விரும்புவதாக கூறப்படுகிறது. இது விரும்பத்தக்க ஒன்றல்ல. யாழ் மாவட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கான விடுதிகளை கட்டுவதற்கு எத்தனையோ காணிகள் இருக்கின்றன. பல மீனவர்கள், கைத்தொழிலாளர்கள் வீடற்றவர்களாய் இருக்கும்போது அவர்களைப் புறக்கணிப்பது நீதியாகாது. இத்திட்டத்தில் மீனவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டால், இதனால், மீனவர்கள் கைத்தொழிலாளர்கள் தங்கள் தொழிலுக்கான விருத்திக்கும் வசதிக்கும், வளர்ச்சிக்கும் துணைபுரியக்கூடிய விதத்தில் நிச்சயமாக அமையும். இது பற்றி ஜனதிபதி சிந்திக்கும் வண்ணம்வேண்டுகிறேன்.

வி. எம். ஜெரூட்.
குருநகர்,
யாழ்ப்பாணம்.

## யாழ். நகர் அழகுபெற...

யாழ்ப்பாணத்தின் அழகையும் சிறப்பையும்கருத்திற்கொண்டு சில ஆலோசனைகளை முன் வைக்கின்றேன்

தற்போது மாநகரசபைக் கட்டிடத்திற்குப் பின்னுலுள்ள இடத்தில் மக்கி கல் கொட்டி அழகுறுத்தியதுபோல, அலுப்பாந்தியில்இருந்து பண்ணைத் துறை வரை அப்பணி தொடரப்படவேண்டும், அப்போது யாழ் பொலிஸ் நிலையத்திற்குப் பின்புறமாக அலங்கோலமான முறையில் கிடக்கும் இரண்டு மலகூடங்களும் அருகே கிடக்கும் சிறு கட்டிடமும், நிலத்தில் மண்டிக்கிடக்கும் புதர்கள் பரவிக்கிடக்கும் கற்கள் யாவும் அப்புறப்படுத்தப்படவேண்டும்.

கும்பல் கும்பலாகக் கோட்டைக்குப் பின்னல் பரவுப்படாது கிடக்கும் மக்கிகள் புல்பூண்டுகளால் மறைக்கப்பட்டுள்ளன. இவை அவ்விடத்தின் அழகையும் சிறப்பையும் பாழாக்குவதால் உடனடியாகப் பரவுப்படவேண்டும்.

வெளிநாட்டு உள்நாட்டு மக்கள் விரும்பிச் செல்கின்ற ஒரு தூய்மை மிக்க இடமாக இக் கடற்கரையை அமைப்பின் அது யாழ் நகருக்குச் சிறப்பையும் தனிப்பெருமையையும் தரக்கூடியதாயிருக்கும்

கோட்டைக்குப் பின்புறமாய் உள்ள வீதி வளைவுகளையும் நேராக்கி, மின்விளக்கு

6-ம் பக்கம் பார்க்க

## நாடும் நடப்பும்

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரக முதலாவது செயலாளர் செல்வி ஷீலா கேகிகொன்னெலும் அமெரிக்க அரசின் கிழக்குப் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான இயக்குநர் திரு. பீட்டர் லான்டேயும் ஈழநாடு அலுவலகத்திற்கு வந்திருந்தனர்.

தலைநகருக்கு வெளியே இலங்கையில் கடந்த இருபதாண்டுகளாக வெளிவரும் ஒரேயொரு தினசரிப் பத்திரிகை 'ஈழநாடு' என்பதால் அவர்களிருவரும் மிக ஆர்வத்துடன் விசாரித்து அறிந்துகொண்டனர்.

அமெரிக்காவில் பல மாகாணங்களில் தினசரிப்பத்திரிகைகள் வெளிவருகின்றன. அங்கு நிறைய தகவல் தொடர்பு வசதிகளும் செய்திச்சேவைகளும் இருக்கின்றன, இந்த வசதிகளில் ஆயிரத்தில் ஒன்றுகூட இங்கு இல்லையென்பதையும் இத்துணை கஷ்டங்களுக்கு மத்தியிலும் இருபதாண்டுகள் 'ஈழநாடு' தனது பணியைச் செய்துவருவதையும் தெரிந்துகொண்ட அவர்களிருவரும் வியப்புக்கலந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டனர் திரு பீட்டர் லான்டே 'ஈழநாடு' பிரதிகள் சிலவற்றையும் தம்முடன் எடுத்துச் சென்றார்.

0 0 0

அமெரிக்காவிலிருந்து சென்ற சனிக்கிழமை கொழும்பு வந்து சேர்ந்த திரு. லான்டே நேராக அடுத்த நாள் யாழ்ப்பாணத்துக்கு வந்து பலரையும் சந்தித்துப் பேசினர். 'ஈழநாடு' அலுவலகத்துக்கு வந்திருந்த சமயம் எதிர்பாராதவிதமாககலாநிதி க. கைலாசபதியையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

மறுநாள் திரு. லான்டேயும் செல்வி ஷீலாவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் சென்றனர் ஞாயிற்றுக்கிழமை இரவு யாழ்.எம்.பி. திரு.வெ. யோகேஸ்வரன் தமது இல்லத்தில் இராப்போசன விருந்தளித்துக் கௌரவித்தார். இலங்கைத் தமிழ் மக்களின் இன்றைய நிலைமையையும் பிரச்னைகளையும் அறிந்து கொள்வதில் திரு லான்டே ஆர்வம் காட்டினர்.

0 0 0

கோப்பாயைச் சேர்ந்த க. குருசாமி என்னும் வாசக நேயர் பின்வருமாறு விளக்கம் கேட்டிருக்கிறார்,

''இம்மாத சம்பளத்துடன் 50 ரூபாய் கூடுதலாகக் கிடைப்பவர்கள் அதாவது 300 ரூபாவுக்கு மேல் சம்பளம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் அவர்கள் வைத்திருக்கும் அரிசிக் கூப்பன்களை அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கவேண்டுமா?''

இதுபற்றி யாழ்ப்பாணம் உதவிஅரசாங்க அதிபர் அலுவலகத்தில் விசாரித்தேன். அவர்கள் சொன்ன பதில் இது.

"300 ரூபாய்க்கு மேல் சம்பளம், வருமானம் பெறுபவர்கள் தங்கள் பங்கீட்டரிசிப் புத்தகங்களை அந்தந்தப்பகுதி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும். அவற்றைப் பெற்றுக்கொண்டு அவர்கள் துண்டுவழங்குவார்கள். இப்படிக் கூப்பன்களை ஒப்படைக்கத் தவறுபவர்கள் வீண் கஷ்டங்களுக்குள்ளாக வேண்டியேற்படும்''.

## ஊர்சுற்றி

## "தமிழ் மாணவர் விஷயத்தில்

# முன்னைய அரசைவிட ஐ. தே. க. அரசுபடுமோசம்"

— அமிர்

[சங்கானை]

"கடந்த அரசாங்கத்தின் காலத்தில், தரப்படுத்தல் முறையை உண்டாக்கி, தமிழ் பேசும் இனத்தின் கல்வி வளர்ச்சியைப் படுபாதாளத்தில் தள்ள முயற்சி எடுக்கப்பட்டது. இன்றைய தார்மீக அரசாங்கத்தில் அந்தநிலை ஒழிக்கப்பட்டு விட்டதென்றும் தரப்படுத்தல் இனி இல்லையென்றும் கூறப்பட்டது. ஆனால் கடந்த அரசின் தரப்படுத்தல் முறையிலும் பார்க்க மிக மோசமான ஒரு கல்வி ஒடுக்குமுறை தற்போதைய அரசினால் அமுல்படுத்தத் திட்டமிடப்படுகிறது. இதனால் கடந்த அரசாங்கத்திலும்விட எம்மை மோசமாகப் படுகுழியில் விழ்த்த இன்றைய அரசாங்கம் திட்டமிட்டுகிறது."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு அ அமிர்தலிங்கம் சங்கானை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "நாங்கள் கோருவதெல்லாம் தமிழ்மாணவர்களின் கல்வியில் தரப்படுத்தி, அவர்கள் கல்வி முன்னேற்றத்தைப் பாழாக்க வேண்டாம் என்பதே அரசு விரும்பினால் வேலைவாய்ப்பில் தரப்படுத்தலை அமுல்படுத்தட்டும் இதனால் வெளிநாடுகள் செல்லுவது தமிழ் இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற இடமுண்டு

"எமது தமிழ் மாணவர்கள் முடிந்தளவு தமது கல்வியில் சிரத்தைகாட்டி எந்தச் சட்டத்திற்கெதிராகவும் எதிர் நீச்சல்போடவேண்டும்."

விழா ஆரம்பத்தில் திரு. அமிர்தலிங்கம் பேசும்போது இளைஞர் பேரவையைச் சேர்ந்த இ. வி. ரீ செல்வம் என்பவர் நாற்பது இருத்தல் கொண்ட ஆள் உயரமான மாலையை அவருக்கு அணிவித்துக் கௌரவித்தார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசும்போது தாய்மார்களுக்கு உருக்கமான ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"தாய்மார்கள், தமிழினம் ஒரே இனமென்றும், அந்த இனத்தில் சாதி, மதப் பாகுபாடுகள் இருக்கமுடியாதென்றும், இதற்காக ஆசிரியர்களும் தாய்மார்களும் நம் சிறுவர்களுக்கு இந்த உணர்ச்சியை ஊட்டி வளர்க்கவேண்டும்" என்றும் அவர் கேட்டுக்கொண்டார். வேறு பலரும் பேசினர்.

விழாவுக்குத் தலைமையாசிரியர் தலைமைவகித்தார். ஆசிரியர் சி க போம்பலம் நன்றி தெரிவித்துப் பேசினர். [ஈ]

## கூட்டுறவுப் பயிற்சி

[பண்டத்தரிப்பு]

இவ்வருடம் யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் அனுமதிபெற்று பயிற்சி பெறவிரும்பும் கூட்டுறவுப் பணியாளர்களிடமிருந்தும், தனிப்பட்டவர்களிடமிருந்தும் ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச் சபைவிண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகும் இப்பயிற்சி வகுப்புகள் டிசம்பர் வரை நடைபெறும். இப்பயிற்சிக்கு விண்ணப்பிப்பவர்கள் இம் மாதம் 31ந் திகதிக்கு முன்பாகத் தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. [ஆ]

## சாந்தானந்தஜி சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

ஸ்ரீமத் சாந்தானந்தசுவாமிகளின் பஜனை, இன்று புதன்கிழமை காலை கொக்குவில் ஸ்ரீராமகிருஷ்ண சாரதா மகளிர் கல்லூரியில் நடைபெறுகிறது இந்நிகழ்ச்சியில் சகல பொதுமக்களும் அனுமதிக்கப்படுவார்களென்று கல்லூரி அதிபர் திருமதி சரஸ்வதி கணேஸ்வரன் தெரிவித்தார். [ஈ]

## கண்ணீருடன் வெளியேறிய நிக்ஸன்

# வெள்ளைமாளிகைக்குள் புன்னகையுடன் புகுந்தர்

வாஷிங்டன், ஜன. 30

நான்கு வருடங்களுக்கு முன் வெள்ளைமாளிகையில் இருந்து கண்ணீர்மல்க வெளியேறிய அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி திரு நிக்ஸன, நேற்று வெள்ளைமாளிகையில் நடைபெற்ற விருந்துபசாரம் ஒன்றில் புன்னகையுடன் கலந்து கொண்டார்.

சீன உதவிப் பிரதமருக்கு வெள்ளை மாளிகையில் அளிக்கப்பட்ட விருந்திலேயே இவர் கலந்துகொண்டார்.

சீன-அமெரிக்கப் புதிய உறவின் சிறப்பியென்ற வகையில் இவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. [உ]

## பணம் பொருள் அபிவிருத்தி:

# விசேடபயிற்சி அளிக்க கரவை கி.அ. சங்கம்ஏற்பாடு

(நெல்லியடி)

கரவெட்டி மேற்கு கிராம அபிவிருத்திச்சங்கம் பணம் பொருள் உற்பத்தியில் ஈடுபட்டு வருபவர்க்கு விசேட பயிற்சியை அளிக்கும் பொருட்டு பயிற்சி நிலைய மொன்றினை நிறுவவுள்ளது.

இப்பயிற்சி நிலையம் அமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள கிராம அபிவிருத்தி சங்கம் பணம் பொருள் அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தாவுடனும் தொடர்பு கொண்டுள்ளது பணம் பொருள் அபிவிருத்தி சபையிடம் ஆலோசகர்களையும் மற்றும் உதவிகளையும் மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கம் கோரியுள்ளதாகச் சங்கச் செயலாளர் திரு. வீ. சின்னத்தம்பி தெரிவித்தார். [உ]

## திவ்யஜீவன சங்கத்தில் திருட்டு

(கொக்குவில்)

திவ்ய ஜீவன சங்க மண்டபத்தினுள் புகுந்த திருடர் அங்கிருந்த பல பொருட்களைத் திருடிச்சென்று விட்டனராம்.

கடந்த வியாழக்கிழமை இரவு யாழ். திவ்விய ஜீவன சங்கமண்டப யன்னலை உடைத்து உட்புகுந்த திருடர் அங்கிருந்து கிடாரப் வெள்ளிப்பாத்திரம் விளக்குகள் போன்ற பலபொருட்களை திருடிச் சென்றுள்ளதாக யாழ்.பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் புலன் விசாரணை செய்துவருகின்றனர். [வி]

## புலோலிமேற்கு மர்மமரணம் சந்தேகத்தில் 10 பேர் கைது!

[புலோலி]

புலோலி மேற்கு 1ம் கட்டையைச்சேர்ந்த திருமதி சின்னையா பார்வதிப்பிள்ளையின் மர்மமரணம் சம்பந்தமாகப் பருத்தித்துறைப்பொலிசார் சந்தேகத்தின்பேரில் 10 நபர்களைக் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தினர்.

பருத்தித்துறை பதில் பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. எம். ஜி. சேரசிங்க, சார்ஜன்ட் திரு எஸ். மாணிக்கராசா ஆகியோரைக்கொண்ட பொலிஸ்கோஷ்டி புலோலி மேற்குப்பகுதியில் நடத்திய திடீர்சோதனையை யடுத்தே இச்சந்தேகநபர்கள் 10 பேரும் கைதுசெய்யப்பட்டதாகவும் தொடர்ந்து விசாரணை செய்து வருவதாகவும் இச்சம்பவம் தொடர்பாக மேலும் பலர் கைதுசெய்யப்பட இருப்பதாகவும் பருத்தித்துறை பொலிசார் தெரிவித்துள்ளனர்.



# 'ஈழநாடு வெற்றிக்கிண்ணம் மகாஜனவுக்கு

காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி மின்னொளியில் நடாத்தப்பெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சுவீகரித்துக்கொண்டது. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிய இப்போட்டி ஆரம்பம்முதல் இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. இடைவேளையின்போது மகாஜனக் கல்லூரி வீரர்கள் 2—0 கோல்களால் முன்னணியில் இருந்தனர். இடைவேளையின் பின்னர் இருகோஷ்டி வீரர்களும் ஒருவரையொருவர் விட்டுக்கொடுக்காமல் விளையாடி தலா 1 கோல்களைப் போட்டனர். இறுதியில்மகாஜனக்கல்லூரிக்கோஷ்டி 3—1 கோல்களால் ஒஸ்மானியாக் கல்லூரியை வெற்றியீட்டியது. இப்போட்டிக்குத் திரு. ஆர். மகேந்திரன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இப்போட்டிக்குப் பிரதம விருந்தினராக காங்கேசன்துறைப்பிரிவு உதவிப்பொலிஸ் அதிபர் திரு. ரி. இசுறுபால கலந்துகொண்டு யங்ஸ்ரேயல் கழகக்கொடியை ஏற்றிவைத்து வீரர்களுக்கு அறிமுகம்செய்து வைக்கப்பட்டார்.

யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகம் காங்கேசன்துறைப் பட்டினப்பகுதியில் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வது மட்டுமல்லாமல் பட்டினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் சேவைகள் செய்துவருவதை கடந்த பத்து (10) ஆண்டுகளாக நான் அறிவேன். இச்செயல்களினால் இக்கழகம் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஏனைய கழகங்களைவிட வேறுபட்டு நிற்கின்றது. இவர்களின் சேவை காங்கேசன்துறைப் பட்டினத்துடன் மட்டும் நின்றுவிடாது இலங்கை முழுவதற்கும் விரிவாக்கப்பட வேண்டும். இதன்மூலம்நசட்டிற்கு இக்கழகம் பெருந்தொண்டு செய்தவர்களாவார்கள். இவர்களின் விழாவிற்கு 'ஈழநாடு பத்திரிகை' முகாமையாளர்கள் வெற்றிக்கிண்ணம் அன்பளித்து, விளையாட்டுத்துறைக்கு ஊக்கம் கொடுத்தமை எல்லோராலும் பாராட்டப்படவேண்டிய தொன்றாகும். இவ்வாறு காங்கேசன்துறை யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகத்தின் 10வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடாத்தப்பெற்ற மின்னொளி உதைபந்தாட்டசுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்த வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தமது உரையில்கூறினர்.

விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 1ம் பிரிவு 11 பேர் கொண்ட கோஷ்டியினர் ஆட்டத்தில் திரு. திருநாவுக்கரசுவினால் அன்பளிக்கப்பெற்ற யாழ் மெற்றல் வெற்றிக்கிண்ணத்தையும் திரு. தா. அப்புத்துரையினால் அன்பளிக்கப்பெற்ற இராஜேந்திரன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தையும், தென்மயிலை ஞானோதயா விளையாட்டுக்கழகமும் வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன. இவ்விரு கோஷ்டிகளும் இணைப்புச் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பெற்றன.

1ம் பிரிவு 7 பேர் கொண்ட போட்டியில் திரு. எம். பி. தியாகராஜாவினால் அன்பளிப்புச்செய்யப்பெற்ற எம். பி. கிருஷ்ணராஜா ஞாபகார்த்த வெள்ளிச்சிலையை, யாழ். நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூகநிலையம் பெற்றுக்கொண்டது.

2ம் பிரிவுப் போட்டியில் காங்கேசன்துறை வொண்டெறஸ் விளையாட்டுக்கழகமும் இணைப்புச் சாம்பியன்களாக தெரிவு செய்யப்பெற்று முறையே அமிட்சாலஞ் கேடயத்தையும் ஈஸ்வரி வைத்திய சாலை சாலஞ்கேடயத்தையும் சுவீகரித்துக்கொண்டன.

3ம் பிரிவுப்போட்டியில் இளவாலை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் சாம்பியன்களாகத் தெரிவுசெய்யப்பெற்று திரு. க. ஜெயபாலசிங்கத்தினால் அன்பளிப்புச் செய்யப்பெற்ற நாகம்மா ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக்கொண்டது.

பாடசாலைகளுக்கிடையிலான ஈழநாடு வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி சாம்பியன்களாக தெரிவு செய்யப்பெற்று ஈழநாடுவெற்றிக்கிண்ணத்தை சொந்தமாகவும் அவுஸ்திரேலியாவில் இருந்து ஜெகநாதன் தம்பதிகளால் அன்பளிப்புச்செய்யப்பெற்ற தங்கமுலாம் பூசப்பெற்ற சாலஞ் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது.

இரண்டாவது இடத்தைப் பெற்ற யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி, கே வி. துரைசாமியினால் அன்பளிப்புச்செய்யப்பெற்ற "ராதிகா" வெற்றிக்கேடயத்தை பெற்றுக்கொண்டதுடன் யங்ஸ்ரேயல் விளையாட்டுக்கழகத்தால் அன்பளிப்புச்செய்யப்பெற்ற வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றுக்கொண்டது.

இச் சுற்றுப்போட்டியின் முதலாம் பிரிவு 10 பேர் கொண்ட போட்டியில் 3ம் இடத்தை சிறுவிளான் ஞானோதயா விளையாட்டுக்கழகமும், 7 பேர் கொண்ட போட்டியில் தென்மயிலை ஞானோதயா விளையாட்டுக்கழகமும் 2ம் பிரிவில் காங்கேசன்துறை காந்திஜி விளையாட்டுக்கழகமும் 3ம் பிரிவில் யாழ்/ நாவாந்துறை சென்மேரிஸ் சனசமூகநிலையமும் பெற்றுக்கொண்டன.

## சிறந்த விளையாட்டு வீரர்கள்

சிறந்த விளையாட்டு வீரர்களாக, சிறீப்பிரகாஷ், இன்பவடிவேல் டொமினிக், சேவியர், ஜமீல், ரேகன்ராஜசிங்கம், அன்ரனிப்பிற்றர் ஆகியோர் தெரிவுசெய்யப்பெற்றனர்.

பரிசளிப்புவிழா செ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது.

(இ

# "தமிழகத்தில் சமயத்திற்கு மூன்றுமிடமே"

## இலங்கை பற்றித் தமிழக அறிஞர் பெருமிதம்

(யாழ்ப்பாண)

"தமிழகத்தைப் பொறுத்தவரையில் அங்கு மக்கள் முதல் அரசியலுக்கும் பின் இலக்கியத்திற்கும் மூன்றாவதாகவே சமயத்திற்கும் இடமளித்துள்ளனர் ஆனால் ஈழத்துமக்கள் சமயத்துக்கே முதலிடம் அளித்துள்ளதை எனது விஜயத்தின் போது அறிந்து கொண்டேன்.

இவ்வாறு ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் விழாவில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் நாடு திரும்புகையில் தருமபுரஆதீனப் பல்கலைக்கல்லூரி முதல்வர் வித்துவான் வி. சா. குருசாமிதேசிகர் நமது நிருபரிடம் தெரிவித்தார். தலைமன்னார் கப்பல் மார்க்கமாக தமிழகத்துக்குப் பயணமான தேசிகரை மணிவாசகர் செயலாளர் க.சிவகுமரன் முன்னாள் செயலாளர் வே. செல்வநாயகம் அகில இலங்கை இந்துமாமன்றச்செயலாளர் பொ. வன்னியசிங்கம் கான அபிவிருத்திச்சபைச் செயலாளர் நா. பொன்னையா காரைநகர் தமிழ் வளர்ச்சிக்கழகச் செயலாளர் ஆ. செந்தில்நாதன் ஆகியோர் வழி அனுப்பி வைத்தனர்.

[உருத்திரபுர.நிரு.உ)


லோட்டஸ்

பைசிக்கிள் டயர்கள் மற்றும் டியூப்கள்

எல்லா அளவுகளிலும் இப்போது கிடைக்கிறது.

ஈ. பி. கிறீஸி அன் கம்பெனி லிமிட்டெட்

98.ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10

தொலைபேசி: 21311 - 4, 32715


## வீதி சீரமைப்பு

(முல்லைத்திவு)

வட்டுவாகலிலிருந்து செல்வபுரம் ஊடாக முல்லைத்தீவு சென்றடையும் வீதி, கடந்த வாரம் முதல் சிரமதானப் பணி மூலம் சீரமைக்கப்பட்டு வருகிறது.

இப்பணியில் வட்டுவாகல், செல்வபுரம் போன்ற இடங்களின் மக்கள் ஈடுபட்டுள்ளனர். சீரமைக்கப்படும் இவ்வீதியால் பஸ்சேவை நடாத்தப்படவுள்ளதென்று தெரிய வருகிறது. [உ]

## ஓய்வு பெற்றனர்

[அரியாலை]

யாழ் பரியோவான் கல்லூரியின் மத்திய பிரிவில் சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்த செல்வி எல் எஸ் தம்பிராசாவும் கணித ஆசிரியையாகப் பணிபுரிந்த திருமதி நதானியலும் ஆரம்பபாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஞானப்பிரகாசமும் தம் சேவையிலிருந்து இளைபாறியுள்ளனர்.

## கலைக்கண்காட்சி



இலங்கைப் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவில் இறுதி ஆண்டில் பயிலும் இரு தமிழ் மாணவர்களில் ஒருவரான யாழ். இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவி செல்வி சந்திரவதனி பேரம்பலத்தின் கலைப் பொருட்காட்சி [சித்திரமும் கைவேலையும்] நாளை 1-ம் திகதி மாலை சமுத்திரா கலைச்சாலையில் தாய்லாந்து ஸ்தானிகர் திரு.அம்பா பத்திரநவிக்கினால் திறந்துவைக்கப்படும். இக் கண்காட்சி தொடர்ந்து 2-ம், 3-ம் திகதிகளிலும் காலை 9 மணி முதல் மாலை 7 மணிவரை நடை பெறும்.

### காரைநகர் கொலை வழக்கு

# கதவினுல் பார்த்தபோது கட்டிலில் கிடந்தார்

(யாழ்ப்பாணம்)

அன்று காலையும், நண்பகலும் சாப்பாடு கொண்டு போனேன். வீடு பூட்டியிருந்தது. என் கணவருக்கு சொன்னேன். அவர் சிலருடன் சென்று கதவை உடைத்துப் பார்த்தபோது இறந்த பெண் கட்டிலில் பேச்சின்றிபடுத்திருந்தார். நகைகள் களவுபோய் விட்டதாகச் சொன்னார்கள்.

காரைநகர் கொலை வழக்கில் சாட்சியமளித்த செ.இராசம்மா மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ். மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமில் முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

இவ்வழக்கில் 76ம் ஆண்டு அக்டோபர் 3ம் தேதி காரைநகரில் சுப்பிரமணியம் மாணிக்கத்தைக் கொலை செய்ததாகவும், அதே நேரத்தில் அதே இடத்தில் 2500 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாகவும், நாகலிங்கம் மாணிக்கம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி தியாகேந்திரன் ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி எஸ். ஸ்ரீரஞ்சன் வழக்கை நடத்தினர்.

செ இராசம்மா சாட்சியமளிக்கையில் தொடர்ந்து கூறியதாவது: நான் இறந்த பெண்ணுக்கு காலை 7 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் சாப்பாடு கொண்டுபோனேன். 3ம் தேதி காலை 7-30 மணிக்கு கொண்டு போனேன் வீட்டில் அவர் இல்லை. கூப்பிட்டுப் பார்த்தேன். படலை கம்பியால் கட்டப்பட்டிருந்தது. வெளியிலிருந்து திறக்க முடியாது அதனல் திரும்பி வந்துவிட்டேன். முதல் நாள் சாப்பாடு கொடுக்கும்போது என்னுடன் கதைத்தார் பின் நேரம் மண்கொட்டவேண்டும் எனக்கூறினர்

அவர் பெலயினமுற்றிருந்தார். அதிகம் சாப்பிடுவதில்லை மத்தியான சாப்பாட்டை இரவுவைத்துச் சாப்பிடுவார் சோடாவும் மாவும் தான் அதிகமாக குடிப்பார்

அவர் கழுத்தில் சங்கிலி அணிந்திருந்தார் இப்போ ஒரு புதிய சங்கிலி இருந்தது காதில் தோடு இருந்ததோ தெரியாது. சங்கிலியைக்கண்டேன்.

மறுநாள் காலையில்சாப்பாடு கொண்டுபோய் கூப்பிட்டேன். பதிலில்லாததினால் திரும்பிவிட்டேன். செத்த வீடு ஒன்றுக்குப்போய்விட்டு,

(8-ம் பக்கம் பார்க்க)

### பரு. தொகுதி

## மின்சார விஸ்தரிப்புக்கு ரூ. 4 3/4 லட்சம் ஒதுக்கீடு

(நெல்லியடி)

பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள கிராமங்களின்மின்சார விஸ்தரிப்புக்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தில் சுமார் 4 லட்சத்து 75,000 ரூபா நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தின் சிபார்சில்பேரில் இந்நிதி ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் மின் விஸ்தரிப்பிற்காக ஒரு லட்சத்து 50,000 ரூபாவும்அல்வாய் மேற்கிற்கும் தெற்கிற்கும் 1லட்சத்து 50,000 ரூபாவும், கற்கோவளம் வருத்துப்பளைக்கு 50,000 ரூபாவும், புலோலி தெற்கிற்கு 50,000 ரூபாவும், மாயக்கைக்கு 50,000 ரூபாவும், வட்டுவினிப் பகுதிக்கு சுமார் 25,060 ரூபாவும் ஒதுக்கிடப்பட்டுள்ளது

[உ]

## சந்தேகநபருக்கு ரூ.1000 பிணை

[கொடிகாமம்]

வரணிப்பகுதி கிணறொன்றில் மரணமாகிக் கிடந்த வவுனியா வாசி ஒருவரின் மரணச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த சின்னத்தம்பி தம்பு என்னும் சந்தேக நபரை 1000 ரூபா பிணையில் செல்ல சாவகச்சேரி நீதவான் திரு. கே. பாலகிட்ணர் நேற்று அனுமதித்தார்.

சந்தேகநபர் சார்பில் சட்டத்தரணி திரு. செ. அம்பிகைபாகன் ஆஜராகியிருந்தார். (உ)




## ஆலயம் சென்றவரை கத்தியால் குத்திஞராம்

[கொக்குவில்]

பத்தி சிரத்தையோடு ஆண்டவனைக் கும்பிடச் சென்ற ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு அலவாங்கிஞல் தாக்கப்பட்டாராம். பலத்த காயத்துக்குள்ளான இவர் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். முத்துலிங்கம் யோகராசா என்பவரே தாக்கப்பட்டவராவார். இச்சம்பவம் நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் நடைபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை தாம் நல்லூர்க் கந்தனைத் தரிசிக்கச் சென்றபோது நல்லூரைச் சேர்ந்த சின்னத்துரை, கந்தசாமி என்று அழைக்கப்படும் ராசா ஆகிய இருவரும் கத்தி, கம்பி சகிதம் வந்து தம்மைக் கத்தியால் குத்தியும் கம்பியால அடித்தும் காயம் விளைவித்துள்ளதாக புதுரேட் நல்லூரைச் சேர்ந்த யோகராசா பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். சந்தேக நபர்கள் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. [அ[

## சடலம் யாருடையது

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பிஞக்கை குளத்தில் அடையாளம தெரியாத ஆணின் சடலம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சுன்ஞகம் பொலிசார் இது தொடாபாக விசாரணை செய்துவருகின்றனர். [கை]

## யாழ். நகர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஏற்றி நிழல் மரங்களை நாட்டி அழகுறச் செய்யின் அக் கடற்கரை சென்னை மரீஞ கடற்கரைபோன்று ஒருகாலத்தில் சிறப்படையலாம.

சு. தருமலிங்கம்.
மண்கும்பான்-4.

0 0 0

## முத்திரைச் சந்தையின் தேவைகள்

முத்திரைச்சந்தை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்காலத்தில் முத்திரைகள்பொறிக்கும் இடமாக விளங்கியது. இங்கிருந்த மீன்சந்தையும் மரக்கறி சந்தையும் அகற்றப்பட்டதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டப்படுகின்ருர்கள், பொதுமக்கள் நலன்கருதி திரும்பவும் முத்திரைச்சந்தையில் இருவித சந்தைகளையும் திறக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

சிறுவர்கள் நலன்கருதி சிறுவர் பூங்காவும் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்ளுகின்ருேம்.

முன்பு முத்திரைச்சந்தையில் அமைந்திருந்த பொது மலசலகூடமும் அகற்றப்பட்டுள்ளது. முத்திரைச்சந்தைக்கு அண்மையில் வடமாகாண கல்வித்திணைக்களமும் நல்லூர் விவசாய விரிவாக்கநிலையமும், இலங்கை வங்கியும் வந்தமையால் பொதுமக்களது புழக்கம் அதிகரித்துள்ளது. எனவே பொதுமக்களது நன்மை கருதி சகல வசதிகளுடன் பொதுமலசலகூடத்தைத் திரும்பவும் அமைத்தல் அவசியமாகின்றது. அத்துடன் சேவிஸ் ஸ்டேசன் முத்திரைச் சந்தை சூழல் ஆசுசி, அசுத்தமடைகிறது இதற்கும் நடவடிக்கை எடுப்பது அவசியம் பொதுமக்கள் நலன்கருதி யாழ். மாநகரசபை நடவடிக்கை எடுக்குமா?

பொதுநலன்விரும்பிகள்.
நல்லூர்.

# சீன உதவிப் பிரதமரின் அமெரிக்க விஜயம் உலக சமாதானம் நிலைக்க உதவும்

## அதிபர் கார்ட்டர் நம்பிக்கை

வாஷிங்டன், ஜன. 30

'சீன உதவிப் பிரதமரின் அமெரிக்க விஜயம், இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவு வலுப்படுவதற்கு மட்டுமல்லாது, உலக சமாதானம் நிலைக்கவும் உதவும்.''

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர், சீன உதவிப் பிரதமர் திரு. டெங்-ஷியாவோ-பெங்கின் அமெரிக்க விஜயம் குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

சீன உதவிப் பிரதமருக்கு வாஷிங்டனில் வெள்ளைமாளிகையில் சிறந்த வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு. கார்ட்டரின் மேற்படி கருத்தைதிரு. பெங்கும் ஆமோதித்து உரை நிகழ்த்தினர்.

சீன-அமெரிக்க நல்லுறவுகள் 200 ஆண்டுகள் தொன்மை வாய்ந்தனவென்றும் திரு. பெங் குறிப்பிட்டார்.

இரு தலைவர்களுக்குமிடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தாகுமென்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் தெரிவித்திருக்கிறார். [உ]

# "முஸ்லிம் சகோதரர்களை துப்பாக்கிக்கு இரையாக்காதீர்!"

## அதிகாரிகளுக்கு பணியவேண்டாம் என்றும் கோருகிறார் ஈரானிய சமயத்தலைவர்

தெஹ்ரான், ஜன. 30

''அதிகாரிகளின் உத்தரவுகளுக்குப் பணியவேண்டாம். அதேவேளையில் சகோதர முஸ்லிம்களைத் துப்பாக்கிக்கு இரையாக்காதீர்கள் என்று பாரிஸில் தற்போது தங்கியுள்ள ஈரானிய மதத் தலைவர் கொமெய்னி, ஈரானிய அரசு உத்தியோகத்தர்களுக்கும், படைகளுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்

தற்போது ஈரானில் நடைபெற்றுவரும் வேலைநிறுத்தங்களையும் கைவிடவேண்டாமென அவர் கேட்டுக்கொண்டுள்ளார்..

### அனுமதி மறுப்பு?

இது இவ்வாறிருக்க, ஈரானுக்கு வருவதற்கு கொமெய்னி எடுத்துக்கொண்ட முயற்சி கைகூடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கொமெய்னி [illegible] புறப்படுவதாக இருந்த [illegible]டகை விமானம், தெஹ்ரானில் இறங்குவதற்கு அனுமதி கோரப்பட்டதாகவும், ஆனால் அதற்குப் பதிலெதுவும் கிடைக்கவில்லையென்றும் கொமெய்னியின் உதவியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈரானிய விமான நிலையங்கள் இப்போது மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### இரு தடவை முயற்சி

ஈரானுக்கு வருவதற்கு கொமெய்னி இரு தடவைகள் முயற்சித்தும் அது நிறைவேறாமற்போய்விட்டது.

### [illegible]க்தியாரை சந்திக்க மறுப்பு

இதேவேளை பாரிஸில் வைத்து ஈரானிய பிரதமர் டாக்டர் பக்தியாரை சந்தித்துப் பேசுவதற்கு கொமெய்னி மறுப்புத் தெரிவித்துவிட்டார்

மக்கள் கருத்தை ஏற்றுப் பதவி விலகாத அவருடன் பேசத் தாம் விரும்பவில்லை என அவர் கூறிவிட்டார் [உ.

# "வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு சகஜநிலை ஏற்படுத்துக"

## தொழிற்சங்கத் தலைவர்களுக்கு பிரி. பிரதமர் வேண்டுகோள்

லண்டன், ஜன. 30

வேலைநிறுத்தங்களைக் கைவிடுமாறு பிரிட்டிஷ் பிரதமர் திரு. கலகன் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வேலைநிறுத்தங்களைக் கைவிட்டுக் கைத்தொழிலைச் சகஜநிலைக்குக் கொண்டுவருமாறு பிரதமர் தொழிற்சங்கத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

### பேச்சுவார்த்தை

நேற்று பிரதமர் 40 தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோது மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

35 முதல் 40 வீதம் வரை சம்பள அதிகரிப்புத் தரவேண்டுமெனத் தொழிற்சங்கத் தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

### நம்பிக்கை

[illegible]டண வீக்கத்தைக் கட்டுப்படுத்தவும், வேலைநிறுத்தங்களை முடிவுக்குக் கொண்டுவரவும் பிரதமர் மேற்கொள்ளும் இணக்க முயற்சி மூன்று வாரங்களுக்குள் வெற்றிபெறலாமென அரசாங்க வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன. [உ]

# நெல்லியடிச் சுவர்களில் சிறிமா --பண்டா

[உடுப்பிட்டி]

நெல்லியடிப் பகுதியில் உள்ள சுவர்களில் முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அமரர் பண்டாரநாயக்கா ஆகியோரது உருவப்படங்களைக் கொண்ட சுவர் ஒட்டிகள் காட்சியளிக்கின்றன.

# "மனிதகுல மாண்புமிளிர காந்தி வழிஒழுகவேண்டும்"

## ஜெயப்பிரகாஷர் அறிவுரை

புதுடில்லி, ஜன. 30

''அண்ணல் காந்திஜியின் நற்கருத்துக்களை 'வாழ்க்கையில் கடைப்பிடித்து ஒழுகி, மனித குலத்தின் மாண்பைக் காக்கவேண்டும்.''

இவ்வாறு ஜெயப்பிரகாஷ் நாராயண், மகாத்மா காந்தி நினைவு தினத்தையொட்டி வெளியிட்டுள்ள செய்தி ஒன்றில் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

நடைமுறை வாழ்க்கையில் காந்திஜி வழியைக் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் இச்செய்தியில் அவர் வலியுறுத்தியுள்ளார். (உ)

# துருக்கி பயணம்

(நெல்லியடி)

துருக்கித் தொழிற்சங்கச் சம்மேளனத்தின் விசேட மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் பொருளாளரும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசச் செயலாளருமான திரு. பொன் குமாரசாமி துருக்கி செல்லவுள்ளார்.

துருக்கியில் நடைபெறும் இத்தொழிற்சங்க மகாநாடு சுமார் ஐந்து நாட்கள் தொடர்ந்து நீடிக்குமெனத் தெரியவருகிறது. (உ)


நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எஸ் எஸ்.ஆர்-விஜயகுமாரி
முத்துமண்டபம்

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ONE CHANCE IN A THOUSAND
(War Film - color-Scope)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சின்னஞ் சிறுஉலகம்

ராணி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
எம் ஜி ஆர். - அஞ்சலிதேவி நடித்த
சக்கரவர்த்தித் திருமகள் (புதிய பிரதி)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-பத்மினி
விக்கிரமாதித்தன் (புதியபிரதி)

ஸ்ரீதர் (யாழ்நகர்)
மகத்தான 2-வது மாதம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

ராஜா (யாழ்நகர்)
3-வது ஜனத்திரள் வாரம்
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
லலிதா

லிடோ (யாழ். நகர்)
போன்: [illegible] தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

REGAL (Jaffna)
ROMANIAN FILM FESTIVAL
From 29-1-79 to 3-2-79
Daily at, 4-30, 7-00 & 9-30 p m.
THE GREED
1-2-79 "THE HAWKS"

சாந்தி (யாழ்நகர்)
போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
மகாதேவி (புதிய பிரதி);
ALSO! SEVEN NIGHTS IN JAPAN - TRAILER
Next Attraction JEAN PAUL BELMONDO
"THE HUNTER"

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
6-வது ஜனத்திரள் வாரம்
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

# வகுப்புவாத கோஷத்தால் வழிதவறிச் செல்லாதீர்

## மக்கள் விடுதலை முன்னணி கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்களம் பேசும் மக்களுக்கிடையே நீண்டகாலமாக இருந்து வரும் வகுப்புவாதக் குரோதம் இலங்கையின் வளர்ச்சிப் பாதையில் ஒரு பெரிய தடைக் கல்லாக இருந்து வருவது சகலரும் அறிந்த விஷயம். எனவே வகுப்புவாத கோஷத்தால் வழி தவறிச் செல்ல வேண்டாம் என்று பொது மக்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1958-ம் 77-ம் ஆண்டுகளில் மாத்திரமின்றி ஏனைய காலங்களிலும் நடைபெற்றுள்ள இனக் கலவரங்கள் இந்த நாட்டில் பல்வேறு மொழிபேசும் மக்களுக்கிடையில் எதுவித ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டன.

இப்போதும் முன்போலவே குறுகிய வகுப்புவாத ஆத்திர மூட்டங்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன. தமிழ் கடைகளைப் பகிஷ்கரிக்க கோருவது போன்ற சதி இயக்கங்கள் நாடு முழுவதும் இன்று பரவி வருகின்றன. இவை மீண்டும் நாட்டில் பயங்கர இனக்கலவர அபாயம் ஏற்படும் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இதற்குப் பெரும்பாலும் காரணமாக இருப்பவர்கள் இந்த நாட்டிலுள்ள முதலாளித்துவ கட்சிகள் தான்

இவர்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்து வருபவர்களான சந்தர்ப்பவாத கும்பல்களும் குழுக்களும் கூட பொறுப்பாளிகளாவார்.

தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விட்டு தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பவர்களைக் கண்டிக்கும் அதே சமயம் சிங்கள மக்களுக்கு எதிராக தமிழ் பேசும் மக்களை வழிநடத்திச் செல்பவர்களையும் கண்டிக்கிறோம்.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நமக்குக் கிடைத்த செய்திகளின்படி பொய் வதந்திகளைப் பரப்புவதன் மூலம் மக்கள் மத்தியில் இனக்குரோதத்தை கிளறி விட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமக்குத் தெரியவந்துள்ளது.

எந்த மொழி பேசும் மக்களாக இருந்தாலும் அவர்கள் உண்மையான மனித சுதந்திரத்தை அனுபவிக்கும் சமத்துவ உரிமையைப் பகிர்ந்து கொள்பவர்களாக இருக்க வேண்டும்.

இதனை ஏற்றுக் கொள்ளாத எவரும் மக்கள் தமது அடிப்படை குடியியல் மனித உரிமைகளை அனுபவிப்பதற்கு எதிரானவர்கள் என்றே கருத வேண்டும்.

இந்த நாட்டில் பாட்டாளி வர்க்கத் தலைமையைக் கொண்ட பல்வேறு மொழிகளைப் பேசும் ஒடுக்கப்பட்ட சகல மக்களையும் இந்த வகுப்புவாத நடவடிக்கைகளுக்கு செவிமடுக்க வேண்டாம் என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். அதிகாரதாகம் கொண்ட முதலாளித்துவ சதிகாரக் கும்பலுக்கு இரையாக வேண்டாம் என்றும் அவ்வாறான சதிகாரர்களைக் கவனமாக அவதானித்து அம்பலப்படுத்த வேண்டும் என்றும் நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இன, மொழி, மதஅடிப்படையில் எதுவித பாரபட்சமுமற்ற உண்மையான ஒருமைப்பாட்டை உருவாக்கமுன்நின்றுஉழைக்குமாறு அவர்களை கேட்டுக்கொள்கிறோம். (இ)

## பற்றுக்குறை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாநில வித்தியாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

80 பிள்ளைகள் கல்விபயிலும் இப்பாடசாலையில் ஒருதலைமையாசிரியரும் உதவி ஆசிரியை ஒருவருமே கடமையாற்றி வந்ததாகவும், உதவி ஆசிரியை ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றுள்ளதால் தாமே தனித்துப் பாடசாலை நடத்த வேண்டியுள்ளதாகவும், இதனால் தாம் எவ்விதலீவோ அன்றிப்பாடசாலை விஷயமாக யாழ் கல்விக் கந்தோருக்குச் செல்லவோ முடியாதிருப்பதாகவும் எனவே உடன் உதவி ஆசிரியர் ஒருவரை நியமித்து உதவுமாறும் இப்பாடசாலை அதிபர் வடமாநிலக் கல்வியதிபதியையும் பிரதம கல்வியதிகாரி திரு. ஆர். பாலசிங்கத்துடனும் நேரில் பேசியதைத் தொடர்ந்து கல்வியதிபதி திரு ரி. மாணிக்கவாசகர் உதவி ஆசிரியரை விரைவில் நியமிப்பதாகத் தெரிவித்துள்ளார். [அ]

## ஆசிரியர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கக்கூடிய ஒரு திட்டத்தை பின்பற்றுவது தமிழினத்தை நசுக்குவதற்காகவே அதுவும் கல்வித் துறையில் ஒரு சமுகத்தை நசுக்குவது மிக அநீதியானது, தேவையற்றது இத்தரப்படுத்தலை எதிர்ப்பதற்கான வழிகளை எடுக்கவேண்டும்.

“என்னென்ன விதததில் எதிர்ப்புகளைக் காட்டவேண்டுமோ அவற்றை செய்யவேண்டும் மாணவர்கள் பாடசாலை பகிஷ்கரிப்பை பூரணமாக ஆதரிக்கின்றோம். மாணவர் மட்டுமன்றி ஆசிரியர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபடவேண்டும் ஏனெனில் இது முழுத் தமிழ்சமுதாயத்தையும் பாதிக்கும் விஷயமாகும். [க]

## பாடசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாவிலும் உலக அரங்கிலும் பிரச்சாரம் செய்தவரும் இந்தியாவில் திராவிட மக்கள் மீது இந்திமொழியை திணித்து அவர்களது நியாய பூர்வமான உரிமைகளை மறுப்பவருமான இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் வரவை தமிழ் இளைஞர் பேரவை முற்றாக பகிஷ்கரிப்பதாகவும் வேறொரு அறிக்கையில் தெரிவித்துள்ளனர். [கெ]

## நன்றி நவிலல்

அமரர் திருமதி
ச. காந்திமதியம்மை

01-01-1979 அன்று ஆதரவற்ற சூழ்நிலையில் அகால மரணமடைந்த எனது சகோதரி திருமதி ச. காந்திமதி யம்மை [ஆசிரியை புங்குடுதீவு மகாவித்தியாலயம்] அவர்களினதும், அன்னாரது அருயிர் புதல்வன் ச. பிரசன்னாவினதும் மரணச் சடங்கிற்கு முறையான அறிவித்தல் எதுவுமின்றி சமூகந்தந்த, நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் எங்கள் பணிவன்பான நன்றியைத் தெரிவிப்பதுடன், மரண வீட்டில் அவர்கள் அடைந்த இன்னல்களுக்காக எங்கள் மனப்பூர்வமான அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-த. சாம்பசிவமும், பெற்றோர்கள், சகோதரர்களும். 1494

## சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாருக்கு கிடைத்த பெரும் ஆதரவு!

### நூல்களை மறுபிரசுரம் செய்யும் பணி தொடரவேண்டும்”

[யாழ்ப்பாணம்]

சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு விழாவையொட்டி நிதிசேகரிப்பில் ஈடுபட்ட சைவப்பெரியார் நூற்றாண்டுச் சபைக்கு எதிர்பாராத விதமாக கணிசமான அளவு நிதி சேர்ந்ததாகவும், சபையின் திட்டங்களை நிறைவேற்ற இது ஓரளவு போதக் கூடியதாயுள்ளதாயும், இதனைக் கொண்டு நிலையான ஆக்கங்களைச்செயற்படுத்த வேண்டுமென்றும் சபையின் பொதுக்கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசுகையில் சபைத் தலைவர் திரு. ச. சிதம்பரப்பிள்ளை கூறினார்.

சபைக்குப் பொதுமக்கள் அளித்துவரும் ஆதரவைப் பாராட்டிப் பேசிய திரு. சிதம்பரப்பிள்ளை இவ்வாதரவு காரணமாக நூற்றாண்டு விழாச்சபையாக மட்டும் அமைந்த இச்சபை நிரந்தர சபையாக இயங்கவேண்டிய சூழ்நிலைக்குள்ளாகியிருப்பதாகவும் சபையின் ஆன்மிக பலத்தை இதுகாட்டுவதாயுள்ளதாகவும் சொன்னார். பெரியார் நூற்றாண்டு விழாமலர் காலத்தால் அழியாதது என்றும் அவர் கூறினார். கூட்டம் வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றது

செயலாளர் திரு. க. கிருஷ்ணபிள்ளை பேசுகையில் கூறியதாவது:

‘சைவப்பெரியாரின் நூல்களை மறுபிரசுரம் செய்வது சபையின் திட்டங்களில் முக்கியமானதொன்றாகும் இப்பணி தொடர்ந்து நடைபெறவேண்டும். இந்த ஆண்டுத்திட்டம் இதுதான்; பெரியாரின் திருவருட் பயன், ஏற்கனவே மறுபிரசுரஞ் செய்யப்பட்டுள்ளது. இந்நூல் வெளிவருவதற்குப் பேருதவி புரிந்த மலேசியாவிலுள்ள பெரியாரின் பழைய மாணவர்களுக்குத் தமிழ், சைவ உலகம் கடமைப்பட்டுள்ளது.

திரு என். சபாரத்தினம் குறிப்பிட்டதாவது:

‘திருவருட்பயன், சைவ போதம் 1-ம் பாகம், 2-ம் பாகம் இவற்றை முன்பு போல் பாடசாலைகளில் சமய பாடப் புத்தகங்களாக ஆக்க வேண்டுமென்ற சபையின் கோரிக்கையைக் கல்வி அமைச்சு ஓரளவு ஏற்றுள்ளது இது தாமதமின்றிச் செயற்பட மக்கள் ஆதரவு மேலும்பெருக வேண்டும். இவ்வாண்டிற் செயற்படுத்தவென பல பெரியார்கள் பல திட்டங்களைச் சபையில் சமர்ப்பித்துள்ளனர். இவையெல்லாம் சபைக்குக் கிடைக்கும் ஆதரவில்தான் தான் தங்கியுள்ளது. கந்தவனக் கோவிலில் பெரியார் அமைத்த நால்வர்கோவிலை கும்பாபிஷேகத்திற்கு முன் புனரமைக்க வேண்டும். இதற்குத் தேவையான பொருள் பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட வேண்டும்”.

பெரியார் ஞாபக சமய அறிவுப் போட்டி அமைப்பாளர் திரு வெ சிவசுப்பிரமணியம் பேசுகையில், சமய அறிவுப் போட்டியில் நாட்டின் பல பாகங்களிலுமிருந்து 75 பாடசாலைகளிலிருந்து ஐயாயிரம் பேர் பங்கு கொண்டதாகவும் இவர்களில் 400 பேருக்குப் பதக்கங்கள், புத்தகங்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டதாகவும், இதற்குச் சபை 4000 ரூபா வழங்கியதாகவும் தெரிவித்தார்.

பொருளாளர் திரு. ஏ. சின்னையா வரவுசெலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் சபைக்கு 32 ஆயிரம் ரூபா சேர்ந்ததாகவும் இதனால் பெரியார் நூற்றாண்டு விழாவுக்கு 24 ஆயிரம் ரூபா செலவழிக்க முடிந்ததென்றும் இது பெரியாரின் பெருமையையும் தெய்வத்தின் திருக்கூத்தையும் காட்டுவதாகுமென்றும் கூறினார்

நால்வர் கோவில் கும்பாபிஷேகத்திற்குப் பொருள் திரட்டுவதற்கு திரு. வே. நடராஜா தலைமையில் ஓர் உப குழு அமைக்கப்பட்டதுடன் சபை ஆண்டுக் கூட்டத்தை எதிர் வரும் மார்ச் மாதம் சிறப்பாக நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [அ]

## கதவினால்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பிற்பகல் 3 மணிக்கு சாப்பாடு கொண்டுபோனேன். கதவு பூட்டியிருந்தால் சந்தேகப்பட்டு என்கணவனுக்குக் கூறினேன். அவர்கள் வந்து கதவை திறந்து பார்த்தபோது அவர் கட்டிலில் பேச்சின்றிக்கிடந்தார்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகிறது. (க)

## வருடாந்த உற்சவம்

[சாவகச்சேரி]

மிருசுவில் தவசிகுளம், பரிசுத்த காணிக்கை மாதா தேவாலயத்தின் வருடாந்த உற்சவம்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தினமும் மாலையில் நவதின வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

நாளை மாலை விசேஷ ஆராதனைகள் நடைபெறும் 2ம் திகதி காலை திருவிழா திருப்பலிப்பூசையும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும்.

ஆராதனைகளை மிருசுவில் பங்கு கட்டளைகுரவர் வண. பிதா. பற்றிக் ஞானப்பிரகாசம் அடிகளார் நடாத்திவருகின்றார். (தி)


## தேவை

### கட்டட முகாரி

சி-நோர் அபிவிருத்தித்திட்டத்தில் கட்டடப் பகுதி முகாரி வெற்றிடம் உண்டு.

பின்வரும் தகுதியுடையோர் தமது விண்ணப்பங்களை பெப்ரவரி 5ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(அ) தொழில் நுட்ப உதவியாளர் (சிவில்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்வேண்டும்.

(ஆ) 28—35 வயதுக்கிடைப்பட்டவராய் இருத்தல் வேண்டும்.

(இ) கட்டடம் அமைத்தல், மேற்பார்வை செய்தல் ஆகியவற்றில் குறைந்தது 5 வருட அனுபவம் உடையவராய் இருத்தல்வேண்டும்.

(ஈ) வாட்டப்பம், ட்ராக்டர் ஆகியவற்றின் இயந்திரங்களைத் திருத்துவதில் அனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாகக் கணிக்கப்படும்.

திணைக்களங்களில் கடமைபுரிந்து ஓய்வுபெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். இவர்களுக்கு வயதெல்லையிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
சி-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
காரைநகர்.

1493


## மரண அறிவித்தல்

### புலோலி பேதுறுப்பிள்ளை சின்னையா

புலோலி தெற்கு பேதுறுப்பிள்ளை சின்னையா காலமானார். இவர் முன்னாள் குருநாகல் பிரபல வர்த்தகர் பே. சின்னத்தம்பி. திருமதி பாறுபதி கணபதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், தருமலிங்கம் [புற்றளை மகாவித்தியாலய அதிபர்]. பரமநாதன் [ப. நோ. கூ. சங்கம் புலோலி]. பாலசுப்பிரமணியம் (முத்தையன் கட்டு], கந்தசாமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும். கிருஷ்ணபிள்ளை [பங்காளர் கணேசா ஸ்ரோர்ஸ் பரந்தன்] திருமதி மீனாட்சிப்பிள்ளை தருமலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனுமாவார் அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று புதன்கிழமை [31-01-79] பிற்பகல் 3-00 மணியளவில் ஆனைவிழுந்தான் மயானத்தில் நடைபெறும்.

1495

இப்பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 31-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Gene1al PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.